பருத்தித்துறை நகரசபை
யாழ்ப்பாண மாவட்டம்

---

# 1. நிதிக் கூற்றுக்கள்

## 1.1 நிதிக் கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2014 மார்ச் 10 இல் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2013 மார்ச் 25 இல் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. ஆண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2014 டிசம்பர் 19 இல் சபையின் தவிசாளருக்கு வழங்கப்பட்டது.

## 1.2 அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து பருத்தித்துறை நகரசபையின் 2013 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப் பாய்ச்சலினையும் இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக் கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

i. நிதிக் கூற்றுக்களில் அவதானிக்கப்பட்ட கணக்கீட்டுக் குறைபாடுகள் சொத்துக்கள், பொறுப்புக்கள் மற்றும் வருமானம் தொடர்பில் பின்வரும் அட்டவணையில் காட்டப்படுகின்றன.

| நிதிக் கூற்றுக்கள் மீதான தாக்கம் | சொத்துக்கள் | | பொறுப்புகள் | | வருமானம் | |
|---|---|---|---|---|---|---|
| | சந்தர்ப்பங்களின் எண்ணிக்கை | பெறுமதி ரூபா | சந்தர்ப்பங்களின் எண்ணிக்கை | பெறுமதி ரூபா | சந்தர்ப்பங்கவின் எண்ணிக்கை | பெறுமதி ரூபா |
| குறைத்துக் கூறல்கள் | 03 | 2இ647இ232 | 01 | 20இ425இ119 | 01 | 29இ450 |
| அதிகரித்துக் கூறல்கள் | 01 | 149இ922 | 01 | 34இ404இ489 | | |
| விடுபடல் | | | 01 | 25இ572 | | |

ii. சபையின் பயன்பாட்டிலுள்ள 11 நன்கொடை வாகனங்களின் பெறுமதிகள் மதிப்பிடப்பட்டு இறுதிக் கணக்கில் உள்ளடக்கப்படாமையால் மோட்டார் வாகனம் வண்டிகளும் பெறுமதி கணக்குகளில் குறைத்து கணக்கிடப்பட்டுள்ளது.

1.3.2 கணக்காய்விற்கான சான்றுகளின்மை
-----------------------------------------------------
கணக்காய்வுக்குத் தகவல்களைச் சமர்ப்பிக்காமை
---------------------------------------------------------

தேவையான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமையால் ரூபா 13இ006இ084 பெறுமதியுடைய கொடுக்கல் வாங்கல்களை கணக்காய்வின்போது சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது.

1.3.3 இணக்கமின்மைகள்

-----------------------------

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமைக்கான சந்தர்ப்பங்கள் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் நிதிப்பிரமாணங்களுடனான தொடர்பு | விபரம் |
|---|---|
| நகரசபை கட்டளைச்சட்டங்கள் விதிகள் | |
| அத்தியாயம் 255 பிரிவு 76 (1) | அங்கீகாரமற்ற 13 கட்டிடங்கள் தொடர்பாக சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப் பட்டிருக்கவில்லை. |

| | |
|---|---|
| நிதி ஒழுங்கு விதி 571 | 2010ம் ஆண்டில் கடைத் தொகுதிகளை வழங்குவதற்காக அறவிடப்பட்ட பகுதி வைப்புக்கள் ரூபா 6இ302இ092 நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப் பட்டிருக்கவில்லை. |
| 1939ம் ஆண்டின் நகரசபை நிதி ஒழுங்கு விதி அத்தியாயம் ஏ பிரிவு 168 | நகரசபைக்குரிய முற்பண பதிவேட்டில் தனிப்பட்ட முற்பணங்களுக்கு பெயர் வாரியாக தனியான முற்பண பதிவேடு பேணப் பட்டிருக்கவில்லை. |
| அத்தியாயம் ஏ பிரிவு 176 | வைப்பு பதிவேட்டு மீதிகள் பிரதான பேரேட்டு மீதியுடன் இணக்கம் செய்யப்பட்டிருக்கவில்லை. |

## 2. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின்படி மீளாய்வாண்டிற்கான சபையினுடைய நிதிப்பெறுபேறுகள் செலவினத்திலும் கூடிய வருமான மிகையாக ரூபா 34இ404இ489 விளைந்திருப்பதுடன் நேரொப்பான முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது செலவிலும் கூடிய வருமான மிகையாக ரூபா 1இ030இ071 விளைந்திருந்தது.

### 2.2 நிதிசார் கட்டுப்பாடு

பாதீட்டு மதிப்பீடானது சரியான முறையில் தயாரிக்கப்படாமையால் பாதீட்டு வருமானத்திற்கும் உள்ளவாறான வருமானத்திற்கும் இடையே ரூபா 33இ254இ275 வேறுபாடு ஏற்பட்டதுடன் பாதீட்டு செலவினத்திற்கும் உள்ளவாறான செலவினத்திற்கும் இடையே ரூபா 13இ047இ873 வேறுபாடு ஏற்பட்டுள்ளமை கணக்காய்வில் அவதானிக்கப்பட்டுள்ளது.

## 2.3 வருமான நிர்வாகம்

### 2.3.1 மதிப்பிடப்பட்ட வருமானம் உள்ளபடியான வருமானம், நிலுவை வருமானங்கள்

தவிசாளரினால் சமர்ப்பிக்கப்பட்டவாறு மீளாய்வாண்டு தொடர்பான மதிப்பிடப்பட்ட வருமானம், உள்ளபடியான வருமானம் நிலுவை வருமானங்கள் மீதான தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| வருமான விடயம் | மதிப்பிடப்பட்டது | உள்ளபடியானது | திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட நிலுவைகள் |
|---|---|---|---|
| | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 |
| ை.இறைகளும் வரிகளும் | 967 | 1இ056 | 3இ212 |
| ைை.குத்தகை வாடகைகள் | 11இ767 | 26இ896 | - |
| ைைை.அனுமதிப்பத்திரக்கட்டணங்கள் | 1இ086 | 1இ227 | 97 |
| ைஎ.வேறு வருமானங்கள் | 44இ540 | 62இ434 | 25இ668 |

### 2.3.2 வருமான முகாமைத்துவம்

மீளாய்வாண்டினதும் முன்னைய காலங்களிலும் அறவிட வேண்டிய வீதவரி, கடை வாடகை மற்றும் நிலவாடகை கட்டணங்கள் ரூபா 4,265,527 அறவிடுவதற்கு ஆக்கபூர்வமானதும் சட்ட ரீதியானதுமானமான நடவடிக்கைகள் எடுக்கப் பட்டிருக்கவில்லை.

### 2.3.3 நீதிமன்றத் தண்டப்பணங்களும் குற்றப்பணங்களும் ரூபா 4,193,000

2011 – 2013ம் ஆண்டு காலப்பகுதிகளில் பருத்தித்துறை நீதவான் நீதிமன்றிலிருந்து பெற வேண்டிய குற்றப்பணங்களும் தண்டப்பணங்களும் ரூபா 4,193,000 வினை பெற்றுக்கொள்வதற்கு ஆக்கபூர்வமான நடவடிக்கை எவையும் சபையால் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

2.3.4 முத்திரைத் தீர்வைக் கட்டணம்

---

i. 2010, 2011, 2012 மற்றும் 2013 ம் ஆண்டு காலப்பகுதிக்கு காணிப் பதிவாளர் நாயகத்திடமிருந்து வரவேண்டிய முத்திரைத் தீர்வைக் கட்டணங்கள் ரூபா 44இ128இ203 அறிக்கையிடும் திகதி வரையும் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

2.4 சொத்துக்களின் முகாமைத்துவம்

---

2.4.1 பயன்படுத்தப்படாத மற்றும் குறைப் பயன்பாட்டிற்குட்பட்ட பௌதீக வளங்கள்

---

வாகனப்பயன்பாடு

---

i. மீளாய்வாண்டில் மூன்று வாகனங்கள் பயன்பாடின்றி வாகன தரிப்பிடத்தில் காணப்படுகிறது.

ii. இரண்டு வாகனங்களின் மானி வாசிப்பு பழுதடைந்தமையால் கிலோ மீற்றருக்கான எரிபொருள் பயன்பாட்டினை கணக்காய்வில் அறிய முடியாதுள்ளது.

2.5 செயற்பாடுகளின் செயற்திறமையின்மை

---

2010ம் ஆண்டில் உள்;ராட்சி ஆணையாளரினால் உள்;ராட்சி மன்றங்களின் செயற்பாட்டு விருத்திக்காக வழங்கப்பட்ட மூலதன நன்கொடை ரூபா 587,091 மீளாய்வாண்டு இறுதிவரை பயன்பாடற்ற நிதியாக பொது வைப்புக் கணக்கில் உள்ளடக்கப்பட்டுள்ளது

2.6 ஒப்பந்த நிர்வாகம்

---

i. நிறைவேற்றப்படாத செயற்திட்டங்கள்

---

மீளாய்வாண்டில் நிறைவேற்ற வேண்டிய ரூபா 16இ295இ700 பெறுமதியான 10 மூலதன வேலைத் திட்டங்கள் நிறைவேற்றப்படாது சில்லறைக் கடனாளிகள் கணக்கில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

ii. நிறைவேற்றப்பட்ட அங்கீகாரமற்ற வேலைத்திட்டங்கள்

-------------------------------------------------------------------------------------------

மீளாய்வாண்டின் வரவு செலவுத்திட்டத்தினால் அங்கீகரிக்கப்படாத ரூபா 3இ316இ796 பெறுமதியான 05 வேலைத்திட்டங்கள் மீளாய்வாண்டில் சபை நிதியிலிருந்து பெறப்பட்ட பணத்தினால் நிறைவேற்றப்பட்டுள்ளது.

3. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

-------------------------------------------------------

பின்வரும் முறைமைகள் கட்டுப்பாடுகளில் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

i. வருமான சேகரிப்பு

ii. வரவு செலவுத் திட்டம்

iii. வாகன பயன்பாடு

iv. சில்லறை கடனாளிகள்

v. வைப்புக் கணக்கு